செய்தி வெளியீடு எண்:343 நாள்:03.07.2009

திருப்பெரும்புதூரில் உள்ள தொழிலதிபர்கள், மரியாதை நிமித்தம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்தனர். திருப்பெரும்புதூர், நாட்டின் பெரிய தொழில் மையமாக விரைவில் வளர்ச்சி அடைவதற்கு அரசு எடுத்த முயற்சிகளை பாராட்டிய தொழிலதிபர்கள், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மேலும் சில நடவடிக்கைகளை எடுக்குமாறு துணை முதலமைச்சரை கேட்டுக்கொண்டனர்.

திருப்பெரும்புதூர் மற்றும் ஓரகடம் பகுதிகளைப் பார்வையிட்ட துணை முதலமைச்சர், தொழிற்பூங்காக்களில் சிப்காட் நிறுவனம் செய்துள்ள உட்கட்டமைப்புப் பணிகளை ஆய்வு செய்ததுடன், சாலைத் தொடர்பு, தண்ணீர் வசதி போன்ற வசதிகளை மேலும் மேம்படையச் செய்து, திருப்பெரும்புதூரை முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாக தேர்வு செய்வதற்கு மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

ரெனோ நிசான் நிறுவனத்துடன் 22.2.2008 அன்று அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளபடி, 7 ஆண்டு காலத்திற்குள் 4500 கோடி ரூபாயை அந்நிறுவனம் முதலீடு செய்ய வேண்டும். இந்நிறுவனம் 4 இலட்சம் கார்களைத் தயாரிக்கும். திட்ட அமைவிடத்தைப் பார்வையிட்ட துணை முதலமைச்சர், ரெனோ நிசான் நிறுவன அலுவலர்களுடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகளை துணை முதலமைச்சர் வெகுவாக பாராட்டினார். திட்டம் விரைவாகச் செயல்படுவதற்கு ஏதுவாக, அரசால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் ஏதேனும் உள்ளதா என்று அவர் விசாரித்தார். திட்டம் விரைவாக செயல்படுவதற்கு உதவும் வகையில் நல்லமுறையில் பங்காற்றுமாறு பல்வேறு அரசு அமைப்புகளுக்கு அவர் உத்திரவிட்டார்.

சான்மினா எஸ்.சி.ஐ டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தொழிற்சாலை அமைவிடத்தை துணை முதலமைச்சர் பார்வையிட்டார். இந்நிறுவனத்துடன் 19.6.2007 அன்று

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது இந்நிறுவனம் 225 கோடி ரூபாய் முதலீடு செய்து 1325 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். முதற்கட்டப் பணி பெருமளவில் முடிக்கப்பட்டு சோதனை உற்பத்தி நடைபெற்று வருகிறது. நிறுவனத்தின் பணிகள் துணை முதலமைச்சரால் பாராட்டப்பட்டன.

நோகியா இந்தியா நிறுவனத்தின் திட்ட அமைவிடத்தை துணை முதலமைச்சர் பார்வையிட்டார். இந்நிறுவனம், 675 கோடி ரூபாய் முதலீடு செய்து 1970 பேர்களுக்கு வேலையளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ஆயினும், 1000 கோடி ரூபாய்க்கும் மேலாக முதலீடு செய்து சுமார் 9000 பேர்களுக்கு வேலையளித்துள்ளதற்கு இந்நிறுவன நிர்வாகிகளை துணை முதலமைச்சர் வெகுவாகப் பாராட்டினார்.

இந்நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய துணை முதலமைச்சர், அவர்களின் பிரச்சினைகளை குறிப்பாக நல்ல தங்குமிட வசதிகள்/போக்குவரத்து வசதிகள் கிடைக்கின்றனவா என்று விசாரித்தறிந்தார். இத்தகைய பிரச்சனைகளுக்கு விரைவில் தகுந்த தீர்வுகளை அரசு அளிக்கும் என அவர் உறுதியளித்தார்.

திருப்பெரும்புதூர் மற்றும் ஓரகடத்தில் உள்ள சிப்காட் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை துணை முதலமைச்சர் பார்வையிட்டார். இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளையும், உடமைப் படுத்தப்பட்ட பகுதி குறித்தும் துணை முதலமைச்சர் ஆய்வு செய்தார். மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அளிக்குமாறு அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, தொழில் துறை முதன்மைச் செயலர் திரு எம்.எப்.பாருகி, இ.ஆ.ப., சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன், இ.ஆ.ப., துணை முதலமைச்சரின் செயலர் திரு கே, தீனபந்து, இ.ஆ.ப., மற்றும் அரசின் இதர உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.